ஸ்ரீ

பரமபதி துணை.

அல்லியரசாணி திருப்புகழ் காவடிச் சிந்து

மகா-ா-ா-ஸ்ரீ விரகாலூர்

சுப்பையாப்பிள்ளை அவர்கள்

இயற்றியதை

மதுரை வடக்காவணிமூலவீதி, புத்தகவியாபாரம்

இ. ராமசாமிக்கோனாரால்,

[illegible] ஸெல்வியர் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1924. [அணா-4

23 APR 1924

O-,1MSD1,A
N24
12086

மதுரைத் தமிழ் வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ

நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களியற்றிய.

பதிவிரதா பராக்ரமம் அல்லது

சாவித்ரி சத்யவான் சரித்திரம்.

நண்பர்களே! கவனியுங்கள்! கவனியுங்கள்!!

மது தமிழ் வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் இயற்றிய "நல்லதங்காள் சரித்திரத்திலுள்ள பாடல்களைப்படித்த கன வான்கள் அவர் பாடல்களையே படிப்பதற்குப் பிரியங்கொண்டு வாயூறுதவர் கள் இல்லை" என்பது யாவருமறிந்த விஷயமல்லவா?

ஷை நாயுடவர்களியற்றிய இந்தச் சாவித்ரி சத்யவான் சரித்திரத்தில் கலிங்க தேசத்தரசன் ராஜ தர்பாரில் தேசவிசாரணை செய்யும் ஆடம்பர மான பாடல்களும், சால்வபுரியாசனுடன் போர்புரிந்து நாட்டைக் கைப் பற்றும் வீராவேசமான பாடல்களும், வசனங்களும் ராஜ தந்திர முறைப் படியும், மிக்க ஆக்ரமரோஷ விதிப்படியு மிருக்கும்.

சாவித்ரி தன் சகிமார்களுடன் நந்தவனத்திலுலாவும் காட்சியமைந்த பாடல்களும், பிமத்தால் துரத்தப்பட்ட சாவித்ரி சத்யவானல் ஆதரிக்கப் பட்ட சமயத்தும், இருவர்க்கும் ஏற்படும் காதல் கலப்பின் சமயத்தும் உள்ள பாடல்களும் தர்க்க வசனங்களும் வெகு சிருங்காரமா யிருக்கும்.

எமராஜன் தர்பாரில் எமபடர்களிடத்தில் அகப்பட்டுத் திண்டாட்டப் படும் சண்டாளன் ஒருவன் தான் செய்த தீயசெய்கைகளைச் சொல்லிப் புலம்புதல் படிக்கப்படிக்கக் கொண்டாட்டமா யிருக்கும். இப்பாடல்களைப் படித்தோர்களும், கேட்டோர்களும் எத்தகையினராயினும் அவர் தீயவழி களில் மனதைச் செலுத்த மாட்டார்களென்பது திண்ணம்.

சத்யவான் உயிர் நீங்கும் சமயம் இருவர்க்கும் பிரிவாற்றாமையால் ஏற்படும் சோகரசமான பாடல்களைப் படித்தோர் கல்மனதுடையவராயி னும் அங்கு கலங்காதிருக்க முடியாதென்பதில் ஐயமில்லை.

பதிவிரதா சிரோமணியாகிய சாவித்ரி தன் விரதமகிமையால் எமனு டன் பின்தொடருஞ்சமயம் இருவர்க்கும் ஏற்படும் தர்க்கமும், கணவனின் உயிர்மீட்டும் பாடல்களும், வசனங்களும் படிக்கப்படிக்க உருக்கமும், இன்பமுமாயிருக்கும். இங்கு தம்பதிகளின் அன்பின்தகைமை வெளிப்படும்.

இச்சரித்திரத்திற்கென அமைந்த தமிழருமையான வசனசாதுர்யங் கள் வாசிக்கத்தகுந்தது, இன்னிசையமைந்த பாடல்கள் படிக்கத்தகுந்தது. இடத்திற்குத் தக்கவாறு அமைந்த புதிய வர்ணமெட்டுகள் கேட்கத் தகுந்தது. சொற்பக் காப்பிகளே தயார். 1-2பாகங்கள் விலை அணா—8

,, நல்லதங்காள் சரித்திரம் 1, 2 பாகம் தனித்தனி	,,	0—4—0
,, இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து	,,	0—2—0
,, ஷை காந்தி தியானம் சிங்காரப்பாட்டுகளுடன்	,,	0—1—0

உ

சிவமயம்

மீனாம்பிகை துணை.

அல்லியரசாணி திருப்புகழ்காவடிச்சிந்து

விநாயகர் துதி-வெண்பா.

மதுரைநக ராண்ட மகராணியல்லி
மதுரச் சரிதைதனை மன்னும்—மதுரமாஞ்
செந்தமிழிற் பாடச் செயலீந் தருளுமாம்
தந்திமுகக் கடவுள்தாள்

நகுமோமுகனல் என்ற மெட்டு.

கணநாதனே ஓடிவாவா
காட்சிதரத் தருணமிது (கண)

துணையுனையேயலதாரினித் துன்பமுற்றேனன்பனே
தோன்றி யான்று சோகந் தீருங்கோனே (கண)

வருமமிது தருமோமிகு வஞ்சநெஞ்சமிஞ்சினேனே
வருந்தி யிருந்து மயங்கிவாடுறேனே (கண)

அருமைத்தமிழ்க்கவியோதுசுப் பையனிடமையுமென
அமல விமல கமல பாதந் தா (கண)

வாணி துதி.

மடமானேவுன்னினைவால் என்ற வர்ணமெட்டு.

கலைவாணி உன்னிருதாள் கருதினேனே

அலைகடல்மேற்றுயில் ஆயன்மருகளே
புலையனென்னாவிற் புகுந்தருளே (கலை)

வேதன்மனைவியரே விரும்புமடியவரே
போதமுயர்ச்செய்திடும் புராதனியே (கலை)

வெண்டாமரைமலரில் வீற்றிருக்குந்தாயே
அண்டினேனுந்தனை அறிகுவாயே (கலை)

சுப்பையப்பாவலன் துதிபரிபாலியே
தப்பிதம்போக்கியாள் ததியிதுவே (கலை)

அர்ச்சுனனும், கிருஷ்ணனும் தீர்த்தயாத்திரை செய்து வருதல்.

கண்ணாயிரம்படைத்த என்ற மெட்டில் பின்முடுகு.

கங்காநதியமுனைத் துங்கபத்ராகிருஷ்ணனை
காவிரியும்பெரு வாவிகளும்பல நண்ணினோம் கோ
தாவரிசிந்துச முத்திரஸ்நானமும் பண்ணினோம் தேச
சஞ்சாரம் நெஞ்சாரச் சந்தோஷ முந்தோணக் (கங்)

சன்யாசியாச்சிரமங் கன்யாகுமரிபெண்ணை
சரஸ்வதிநர்மதை பிரமபுத்திராவையுங் கூடினோம் தாம்
பிரவருணிச்சுனை யருவிகளிற்படிந் தாடினோம் பல
பேதககாதக பாதகமேயற நீதாபோதசாதகமேயுறக் (கங்)

காசிராமேஸ்வரம் நல் லாசியருணாசலங்
கயிலையொருப்பதி மயிலைதிருப்பதி கண்டோமே திருக்
கமலைசிதம்பரம் விமலதலம்பல சென்றோமே அந்தக்
காளத்திநாயகரை நீளத்தியானித்துக்
காஞ்சிக்கழுங்குன்றினை வாஞ்சித்துபாசித்துக் (கங்)

மாயையவந்திமற்றுந் தேயம்பலவுஞ்சுற்றி
மாயவரங்குடந் தாபுரிதஞ்சையும் போற்றினோம் நல
மானசிராமலை ஞானபிரானையு மேற்றினோம் தென்
வாமமது ராபுரிவந் தோமனமு லாசமுறக் (கங்)

மதுரைமாநகரில் முத்துவாணிபச்செட்டியார் புலம்பிக்கொண்டிருக்கிறான்.

மைத்துனாயென்மனைவிமக்கள் என்ற மெட்டு.

முத்துங்குறையலாச்சே மோசம்வந்துநேரலாச்சே
மோசம்வந்துநேரலாச்சே நாசம்வரக்காலமாச்சே
நித்தங்கலமுத்துநான் நேர்மையாயளந்துவந்தேன்
இத்தினங்குறைகிறதே என்குலைநடுங்குறதே
அல்லியிடையறிந்தா லாக்கினையுஞ்செய்குவாளே
ஆக்கினையுஞ்செய்குவாளே தூக்கிலிட்டுக்கொல்லுவாளே (மு)

கணவன்சோற்கேட்கவேணுமே என்ற மெட்டு.

மதுரைமீனாட்சியம்மையே—வரமருள்வாய்
மதுரைமீனாட்சியம்மையே (ம)

சதுர்மறையோர்கள்தொழுந் தற்பரிதடாதகையே
மதனகோபாலன் தங்கையே வாலாம்பிகையே (ம)
சோமசுந்திரநாதர் தோகையேசுபகரியே
தாமதமாகாதுதெரியே வந்தாதரியே (ம)
வஞ்சகமிது தகுமோ வர்மமோமனம்வெம்பினேன்
தஞ்சமெனநான்விளம்பினேன் தானேநம்பினேன் (ம)
தாசன்சுப்பையனிதஞ் சாற்றிடுந்தயாநிதியே
நேசமுடனுளுங்கதியே இதுததியே (ம)

அர்ச்சுனன் செட்டியாரை விசாரித்தல்.

ஐப்தகலந்தரு என்ற மெட்டு.

இப்படிநின்று புலம்புவதேனையா
எந்தனுக்குரைப்பீ ரினிநீரே
எப்படியாகிலு மும்மனக்குறைகளை
யானேயகற்றுவே னறிவீரே
என்னை நம்பினாலுமக்கு இல்லை துன்பமே
உண்மையளித்தாலெனக்கு உண்டின்பமே
ஏனோஅல்லி என்றுசொல்லி எங்கிமனம் வாடுகின்றீர்
இன்னவிதமானதுக்கமென்றுரைப்பதும்கடமை (இப்)

அல்லியைப்பற்றி அர்ச்சுனன் கிருஷ்ணனிடத்தில் வினவுதல் தர்க்கம்.

தோட்டுத்தாலிகட்டிய என்ற மெட்டு.

அர்:— மைத்துனாஇதுவென்ன ஞாயம் இந்த
மங்கையாளரசகி யாயம் கரு
வத்தையடக்கிடவி தாயம் அல்லி
மாதைமணந்திடவு பாயம்
மார்க்கமுரைநேயம் வரும்நமக்க பாயம் இந்த
மட்டுஞ்செய்குவாய்ச காயம் (மை)

கிரு:— தீர்த்தயாத்திரைக்கே வந்து பல
தேசசஞ்சாரம்பு ரிந்து திவ்ய
க்ஷேத்திரங்களையும்ப ணிந்து நீ
திரும்பிப்போவதைம றந்து
தீவினைநினைந்து தியங்குறுயிருந்து வா
சீக்கிரம்போவோம்ந டந்து (தீர்)

அர்:— பாவையல்லியவள் மீது மிகப்
பாசமாகினேனிப் போது நல்ல
பாணிக்கிரகணஞ்செய் யாது நம்
பதிக்குயான்வருவ தேது
பஞ்சவர்கள்மீது பரிவுடையசாது தயை
பண்ணுவீர்தடைசொ லாது (பா)

கிரு:— பொம்மைவிருதுகட்டி நாளு மிந்தப்
பூமண்டலத்தையர சாளு மல்லிப்
பூவைமீதுனக்கு நீளு மாசை
போக்குவாயறிவின் கோளு
புகலுமொழிகேளு புனிதமலகூளு நட
போவோம்நம்பதிக்கு மீளு (பொ)

அர்ச்சுனன் அல்லியை விவாகஞ் செய்துகொள்ள நினைத்தல் தர்க்கம்.

சேந்திமாநகரந்தனில் என்ற மெட்டு.

அர்:— அல்லிராணியைக் கல்யாணஞ்செய்யாமல்
ஆரணனேவர மாட்டேன் திரு
நாரணனேநடை கூட்டேன் அந்த
அங்கசன்கணை யுந்தலாலுள மிங்குளைந்தன மங்களாகர (அ)

கிரு:— அர்ச்சுனவுனக் குச்சிதமாவிது
யாத்திரைக்கேவந்த நீயே இந்தத்
தீத்தொழிற்கேபுகுந் தாயே மிக
அல்லலானதைச் சொல்வலாயினை நல்லகாரிய மல்லவேயிது(அ)

அர். மைத்துனவுனை நம்பிவந்தேனிந்த
வார்த்தையுமோதிட லாமா மழை
காத்தவனேபரந் தாமா அல்லி
மாதையெவ்வித மாகினும்எனக் கீவதுன்கட னுகுமன்புள (அ)

கிரு. எந்தநாளுமுன் தொந்தமானது
எந்தனுக்கேபெரி தாச்சு முனம்
உந்தனுக்குமண மாச்சு இனும்
இந்தமானுநதினைந்துவாடுத லந்தமாபல வந்தமாவென (அ)

அல்லிவேட்டையாடுதல்.

சாரங்கந்தன்னிலோர் என்ற மெட்டு.

காட்டானைசிங்கம் கரடிபுலிகளின் கூட்டம் பெருங்
காண்டாமிருகங் கதித்தசெந் நாய்களின் தேட்டம்
வாட்டமுடனினி ஓட்டங்கொளுமுன்னே
மறிப்போமுயிர் பறிப்போமுடல்
தறிப்போமறங் குறிப்போமடி (கா)

ஓடுதுபாரொரு மானதிவேகம தாக அது
ஓடிவிடுமுன்னே நாடிக்கணைவிடு சாக
கூடுதுபன்றியின் கூட்டங்களொன்றாகக்
கொடுவாளெடுத் திடுவாயடி
கடுவாயொடு முடிவாயிட (கா)

வேங்கைபதுங்கிய ராங்கியைப்பாரடி தாதி இது
வேளையதனுடல் தாளநலுக்குறேன் பாதி
பாங்கிகளேநாலு பக்கமும்வாருங்கள்
பதைத்திடவே வதைத்திடுவோம்
சிதைத்துடலைப் புதைத்திடுவோம் (கா)

காட்டில் அல்லியை அர்ச்சுனன் கண்டு ஆசையுறல்.

பூமிமெச்சிடுமண்ணுமலே என்ற மெட்டு.

வண்ணமாதிவளைக் கண்ணிற்காணமையல் மிஞ்சுதே மதி
தஞ்சுதே களி விஞ்சுதே இந்த
வில்லியாளருகிற் செல்லவோமனது மஞ்சுதே உயிர்
எஞ்சுதே

எந்தநாளிவளென் சொந்தமாவாளென வெண்ணுதே மனங்
குண்ணுதே பயம் நண்ணுதே உடல்
ஏறுமாரன்வாளி கோரமாயுயிரை உண்ணுதே துயர்
பண்ணுதே

அல்லியென்னுமிந்த மெல்லிகையினுந்து பாணமே காண
நாணமே நிலை காணமே சொல
ஐயமேதினியான் செய்யவேணுங்கலி யாணமே பிர
மாணமே

பேடிரூபங்கொண்ட அர்ச்சுனன் அல்லிக்குக் கதையுரைத்தல்.

நொண்டிச்சிந்து.

மங்கையர்க்கரசியே—மதுரை
மாநகராண்டிடும் மதிவதனி
எங்களுக்கரசியரே—வடக்கில்
இந்திரப்ரஸ்தமென் ருேர்நகரை
குருகுலமரபினராம்—ஐவர்கள்
குந்தியின்மைந்தர்க ளாளுகின்ருர்
அவர்களில்மூத்தவராம்—தருமர்
அவருக்கிளையோன்வீம சேனனென்பார்
அன்னவர்க்கிளையவராம்—அர்ச்சுனன்
அரியமதிநகுல சகாதேவன்
தம்பியராமிவர்க்கு—இவரில்
தனுவுவித்தையில்மிக வலமையுளான்
அர்ச்சுனனுகுமம்மா—நல்ல
ஆணுய்ப்பிறந்தவரி லழகுடையான்
பாரவில்லேவளேத்து—எய்து
பாஞ்சாலியாகிய துரோபதையை
மாலேபுனேந்தவீரன்—முற்றிலும்
மதன்கலாமுறையை யறிந்தகுணன்
கன்னியர்மனமுருக்கும்—நல்ல
காளேப்பருவமுள்ள வேளணேயான்
உனக்குமிசைந்தகணவன்—அவ்
னேடுசுகித்திருக்க நாடுமம்மா (தந்திர)

பேடியாகிய அர்ச்சுனனே அல்லி விரட்டுதல்.

பாங்கியேசெங்கமலம் என்ற மெட்டு.

ஆரடாஇங்குவந்தாய் அஞ்சாம
லாண்பிள்ளேயெங்கொளிந்தாய்

அங்கந்தன்னையிரண் டாகப்பிளந்தே
யறிந்திடு வேனடந்தாய்

எங்கடா ஓடுகின்றாய்—உந்தனை
யானும்விடுவேனென்று
இத்தனையெத்துகள் கற்றவனோவுன்
னெழுத்து முடியவந்தாய்

உன்னை விடுவதில்லை இனியுயி
ரோடு நீ வாழ்வதில்லை
ஓடியொளியினுந் தேடிவதையாம
லூருக்குள் போவதில்லை.

அல்லி நடந்தவிஷயங்களைத் தாதிகளிடந் தெரிவித்தல்.

மலடிவயிற்று என்ற மெட்டு.

அருமைக்கிசைந்த சகிமானே மதி
சிறுமை புகுந்த தறியேனே மனத்
தவலமடைந்தே னடிநானே புகன் றிடுவேனே

மனிதனொருத்த னரும்பாவி இள
வனிதையுருக்கொண் டிதுகாவி னல
வசனமுரைத்தென் னிடமேவி இனி துறவாகிக்

காலுமெனக்குப் பிடித்தாண்டி கெட்ட
கதைகளெடுத்து முரைத்தாண்டி அந்தக்
கபடனொளித்து நடந்தாண்டி பிடித் திடவாடி

அல்லிசமர்த்தை அறியானோ கதை
சொல்லியொளித்தா னிதுமேனோ சென்று
அவனைப்பிடித்து வதையேனோ சினந் தணியேனோ

அர்ச்சுனன் கிருஷ்ணனிடம் நடந்தவற்றையுரைத்தல்.

பத்திசாதிக்கவிடாது என்ற மெட்டு.

பல்லவி.

மங்கையாளல்லியைக் கண்டேன் - மணி
வண்ணாவிரகமது கொண்டேன் (மங்)

அநுபல்லவி.

சங்கடமாகுதுள்ளந் தாமதிக்காமலின்றே
சிங்காரமாகமணஞ் செய்துவைப்பீர்நன்றே (மங்)

தாதியரோடருகு சென்றேன் தரை
தாழுங்கணைபொறுக்கி நின்றேன் அந்த
மாதினிடங்கதை புகன்றேன் களை
மாறும்படிபணி முயன்றேன்
சோதிக்கணையாழியைத் துய்யாகழற்றிவந்தேன்
சாதிக்கலாமோவின்னுந் தாபமிகவடைந்தேன் (மங்)

பாதம்பிடித்திடலா னேனே நல்ல
பாசக்கதைகளுஞ்சொன் னேனே அந்த
கோதைவிழித்த தறிந்தேனே கொண்ட
கோபக்குறியுணர்ந்து தானே
சீதரனேமறைந்து சீராய்வந்தேனனே
ஆதரமாயவளை யானுமணைந்திலனே (மங்)

அல்லியைக் கலியாணஞ் செய்து வைக்கும்படி அர்ச்சுனன் கிருஷ்ணனை வேண்டுதல் தர்க்கம்.

வெள்ளிமலையொத்தபலமேடை என்ற மெட்டு.

அர்:- கல்யாணஞ் செய்துவைக்கவேணும் இதில்
காரியமும் வீரியமுந் தோணும் மனக்
கவலைமிகுத்ததினி அவலமொழித்தருளுங்
கண்ணா மணி வண்ணா

எந்தவித மாகினுமவ் வல்லி தனை
எந்தனுக்குச் சேர்த்துவையுஞ் சொல்லி என்னை
இத்ததியுஞ் சித்தமிரங் கித்தயவுவைத்தவதி
தீரும் முகம் பாரும்

கிரு:- தொந்திரவு செய்வதென சும்மா பெருந்
தொல்லைசரி இல்லையிது அம்மா இந்தத்
துற்குணமதைவிடுத்து நற்குணமிகவடுத்து
நீயே வருவாயே

அர்:- தாளமுடியாதினிமே லென்னால் இனி
சீரேனும் பாதமலர் முன்னால் இங்கு
சற்றுமுகம் பாருமையா முற்றுமெனைக் காருமெய்யா
நானே பணிந் தேனே

கிரு:- செய்வதென நானிருக்கும் போது இந்தத்
தென்மதுரை யாளுமல்லி மாது ராணி
தேவிதனை நீவிரும்பி ஆவிவிட மேவினது
சீரா இது நேரா

அர்:- என்னசொல்லினுமனந் தேரேன் இந்த
ஏந்திழையை விட்டுச்செல நேரேன் ஐயோ
ஏதுமினிவாதுபுரி யாதுமட மாதுதனை
நீரே தரு வீரே.

கிருஷ்ணன் அர்ச்சுனனிடம் தாகத்திற்கு ஜலங்கொண்டு வரச்சொல்லல்.

அள்ளி அள்ளிக்குடிக்கும் என்றமெட்டு.

தண்ணீர் கொணர்ந்தெனக்கு உண்ணக்கொடுத்திடுவாய்
தாகமதிக மாகுதே தனஞ்செயா தாகமதிகமாகுதே
தாமதியாம லேஜலந்தேடி நீமதியோடு வாவெனைநாடி (த)
அர்ச்சுனா இப்பொழுதே ஆசையல்லியைக்கலி
யாணமுடித்துவைக்குறேன் சந்தோஷக்கலி
யாணமுடித்துவைக்குறேன்
ஆகுலந்தீர நேயமாநீயே வேகமதாகப் போய்வருவாயே (த)

குளத்துநீரில் அல்லியினுருவைக்கண்டு அர்ச்சுனன் ஆசையுறல்.

பாசுபதம் போலமதன் என்றமெட்டு.

குளத்திலல்லி மாதிருக்கும் கோலமுமறிந்தேன் இவள்
சாலமுந்தெரிந்தேன் அடி
கோதையேவுன் மீதிலேநான் காதலானேனடி (குள)
கங்கையிலுன் அங்கமதைக் கண்டு மயங்கினேன் களி
கொண்டுதியங்கினேன்
காதலியே பேதலியா தாதரிப்பாயே (குள)

மங்கையேநின் அங்கமதென் மனத்தைஉருக்குதே உனும்
அனத்தைவெறுக்குதே செய்யும்
வஞ்சமென்ன தஞ்சமுந்த னெஞ்சங் கல்லோடி (குள)

கொஞ்சுமொழி அஞ்சுகமே கோபமு முனக்கோ மனஸ்
தாபமு முனக்கோ இந்தக்
குளத்திநுக்குள் ஒளித்ததென வெளிக்கு நீ வாடி (குள)

தாமதமாய் ஜலங்கொண்டு வந்ததைப்பற்றி அர்ச்சுனனை கிருஷ்ணன் வினவுதல்.

சாதியிலும் பறையனல்ல என்றமெட்டு.

கிரு:-தண்ணீரெடுத்துவர இன்னேரமானதுவோ
தாகவரட்சியினால் சோகமாகினேனே

அர்:-மாயக்குளத்திலல்லி மாதுமறைந்திருந்தாள்
மைத்துனரேகண்டுநான் மாமோகமாகிவந்தேன்

கிரு:-அல்லியரைக்குளத்துள் அர்ச்சுனாகண்டனையோ
ஆனந்தங்கொண்டனையோ ஆசைமொழிவிண்டனையோ

அர்:-அந்தக்குளமுழுதும் ஆயனேதேடிநொந்தேன்
அல்லியைக்காணவில்லை ஆஆவடைந்தேன்தொல்லை

கிரு:-கன்னியினாசையினால் என்னைமறந்துவிட்டாய்
காண்டீபாவுன்னினைவைக் கண்டேனவலப்பட்டாய்

அர்:-இன்னமுஞ்சோதிப்பது ஏற்குமோமைத்துனரே
ஏங்குதுளமெனக்கு ஏந்திழையையளிப்பாய்

அர்ச்சுனன் துடையில் கிருஷ்ணன் தலை வைத்துத் தூங்குதல்.

ஆறுமுகவடிவேலனே என்றமெட்டு.

நித்திரைமெத்த வருகுதுமைத்துனா
நீட்டுவாயுன் துடையே-சற்று

நேரம்படுத்தெழுந்தாலெனக்குக்களை
நீங்குமிலை தடையே

தூங்கியெழுந்தவுட னுனக்குமணஞ்
சொன்னபடி முடிப்பேன்-அந்தத்
தோகையா ளல்லியை நீகைபிடித்திடச்
சோபனம் நான்படிப்பேன்

குறத்தி அர்ச்சுனனுக்குக் குறிசொல்லல்.

யாவையரே பள்ளமேடு என்றமெட்டு.

அப்பனேநீகேட்டிடுவா யறைகுவேனுனே நீங்கள்
ஐவர்பஞ்சபாண்டவரி லருச்சுனன்நீயே
சந்திர குலத்துதித்த தரணிபன்நீயே வினை
சாடுந்தீர்த்தயாத்திரைக்கே சார்ந்தனைநீயே

தென்மதுரை யாளுகின்ற தேவியல்லியின்மேல் அருந்
தேர்விஜயா ஆசைகொண்டு தியங்குகின்றனையே
பாண்டியன் குமாரிமீது பாசங்கொண்டனையே அட
பார்த்தனேயுன்னாசையின்படி பலிப்பதுமரிதே

அர்ச்சுனன் குறத்தியை வினவுதல் தர்க்கம்.

பாதிமதிநதி என்றமெட்டு.

அர்ச்சுனன்.

ஓதிவரும்குறி யாவும்நிசமென உசிதமிகவடைந் தனனுனே
பூகமதுரையை யாளுமலிமக ராணியெனக்கினிக் கிடைப்பாளோ

குறத்தி.

மேதினியிலும தாசைப்படியலி மாதுகிடைத்திடும் படியாக
வீரமுடன்செயி லேதுதருகுவை நீயுமெனக்குரைத் திடுவாயே

அர்ச்சுனன்.

மீதிலணிபணி யாடைதருகுவ னேதுவினவினு மளிப்பேனே
வேளையிதுவுப காரமதுசெயில் நாளுமுனைமறந் திடுவேனோ

குறத்தி அர்ச்சுனனுக்கு மாத்திரையளித்தல்.

ஷாகைவாலாதூப்யாரா என்றமெட்டு.

மாத்திரைமூன்று தான்தருவேன்
மகிழ்வுடனேகைக் கொளுவாயே
நேர்த்தியாயல்லிக் குளமடைந்து
நீயுரைக்கும் போதவளின் பேருரைக்க வேணுமறி

அத்தண்ணீரை அல்லியுண்டால்
ஆசையுமுன்மே லாகிடுவாள்
சத்தியாயானுஞ் சாற்றுகின்றேன்
தந்திடுவா யெந்தனுக்கு உந்தனணி யாடைகளை (மா)

அல்லிக்குளத்தில் அர்ச்சுனன் மருந்துரைத்து வருந்தல்.

பாதிராத்திரி வேளையில் என்றமெட்டு.

அல்லியேயெந்தன் மெல்லியேசுந்த
ராங்கியேமட மானே இன்ப
மாகியவருந் தேனே என்முன்
பாகவாயினித் தானே அன்றி
ஆறுமாமனந் தேறுமாவுந்த
னாசைநாயக னானே

மாத்திரைகரைந் தோடுதேவுந்தன்
மாமனங்கரை யாதோ குற
மாதுதான்செய்த சூதோ என்ன
மாயமோவிது தீதோ அடி
வன்னமேவிய சொன்னமேயிங்கு
வந்திடாவிழி வேதோ

கண்மணியான பெண்மணியுயிர்க்
காதலிவரு வாயே எந்தன்
காதலுந்தெரி தாயே மிகக்
காயுதுமயல் தீயே நல்ல
காலமேயிது சாலமேனினி
காத்திடாயெனை நீயே

உத்தமியடி பத்தினிக்கண்ணே
உந்தனுடலை தாவி விட
உன்னினேனடி பாவி என்முன்
ஒடிவாவிங்கு மேவி மருந்
துரைத்துநான்மெத்த அலுத்துப்போயினேன்
உண்ணுவேன்பச்சை நாவி

தண்ணீரெடுக்கவந்த அல்லியின் தோழிகள் மருந்துரைக்கும் அர்ச்சுனனைக்கண்டு வினவுதல்.

தர்க்கம்.

கூட்டுறவு பேசி என்ற மெட்டு.

தோழிகள்.

ஆரடாநீபாவி அரசிபேரைக்கூவி
ஊரடாசொல்வாவி உறைந்திருந்துசாவி மருந்
துரைத்தனைதாவி மருந்துரைத்தனைதாவி அட
உனக்குமென்ன பயித்தியமோ
பினத்துறுய்மேவி (ஆ)

அர்ச்சுனன்.

அல்லியரசாணி அழகுமகாராணி
மெல்லிரசக்கேணி விளையுமின்பகாணி மதி
விளங்கியவாணி மதி விளங்கியவாணி அவள்
மீதிலேநான் காதலுற்றே
ஞேதுவீர்பேணி (அல்)

தோழிகள் அல்லியிடத்திலுரைத்தல்.

மஞ்சுநிகர் குந்தளமின்னே என்றமெட்டு.

அல்லிக்குளந்தன்னிலிருந்தே யாரோவொருவன்
பேரோதெரியோம் அங்கையின்மேலேதோமருந்தே பிடித்
தல்லியேயடி மெல்லியேபுனை
வல்லியேயெனச் சொல்லியேவுரைத்
தானதனைக் கண்டுநொந்தனம் இதுவிஷய மூமக்குரைக்க
அம்மணியே நாங்கள் வந்தனம்

அல்லி அர்ச்சுனனைச் சுடுமணலிலுருட்டிக் கொல்லும்படி தோழிகளுக்குரைத்தல்.

மருவேசெறித்த என்ற மெட்டு.

அடியே குளத்துக் கரைமே லடுத்தென்
பெயரே குறித்துச் சொலியேதான்
அழிமா மருந்தைக் கரைவா யுரைக்கு
மவனை ரறுத்துப் புதையாமல்

படுபாவி யைக்கைப் பிடியாப் பிடித்துப்
பலமா யடித்து உதைத் தாற்றில்
பதிவாக் கொதிக்கு மணல்மே லுருட்டி
யுடலே பதைக்கக் கொலுவீரே

அர்ச்சுனன் சுடுமணலில் நின்றுகொண்டு அல்லியின் தோழிகளைக் கூவியுரைத்தல்.

அம்மாமதுரைமீனாட்சி என்ற மெட்டு.

பாங்கி மாரேநமஸ் காரம் பதம்
பணிகு வேனிந் நேரம் அல்லிமேற்
பச்சமான தீரம்
பழிப்பதப சாரம்
ஆசைக் குரியமணச் சேதி உங்கள்
அல்லிராணிக் கோதி விரைவாய்
அழைத்துவாடி தாதி
அமையும்பிரக் யாதி
அல்லியிங்குவரு வாளோ என்னை
அணைந்துகூடு வாளோ அல்லாமல்
அடித்துஓட்டு வாளோ
அருமையறி வாளோ

தோழிகள் அல்லிக்குரைத்தல்.

மஞ்சுநிகர் குந்தளமின்னே என்றமெட்டு.

ஆற்றுமணல்மீதுருட்டினோம் ஆண்டியவனை வேண்டியபடி
அம்மணி யாங்கள் வெருட்டினோம் சற்றும்
அந்தப்பாவிவ ருந்திடாமலி
ருந்தும்பேரைவி ளைந்துகூவினன்
அன்றியெங்கள் பாதம்பணிந்தான் உமையழைத்து வரும்படியாய்
ஆணுவமதாயு முரைத்தான்.

அல்லி அர்ச்சுனனைத் தூக்கிலிட்டுக் கொல்லும்படி உத்தரவிடல்.

இன்னமுங்காணேனே என்ற மெட்டு.

தாதியேநீவாராய் செங்கமலஞ்
சங்கதியைக்கேளாய் இப்போது (தா)

நீதிக்குப் பாதகந் தேடியமூடனை
நெஞ்சிலுதைப்பாயே வதைப்பாயே புதைப்பாயே
அஞ்சாமல் (தா)

எங்கேனுமோடி யொளிந்திடுவானவன்
ஏகிப்பிடிப்பாயே அடிப்பாயே மடிப்பாயே தந்திர (தா)

போக்கிரியாண்டியைத் தூக்குமரத்தினிற்
போட்டுவாடிபோடி விரைந்தோடி பதில்தாடி என்னடி (தா)

தாதிகள் அர்ச்சுனனைத் தூக்கிலேறும்படி சொல்லல்.

மன்னுதந்திடுவீர் என்ற மெட்டு.

செங்:- ஐயா வந்திடுவீர்
அர்:- அல்லி எங்கேயடி
செங்:- இங்கு வந்திடுவாள்
அர்:- ஆ ஆ வந்து விட்டேன்
செங்:- இம்மரத்திலேறும்
அர்:- ஏறுமுபாயஞ் சொல்வாய்
செங்:- உமக்கறியாத தீதோ
அர்:- அறிந்திருந்தாற் கேட்பேனே
செங்:- ஆனல் காட்டுவேன்

தூக்கில் மாட்டிக்கொண்டு தொங்கும் தாதி செங்கமலத்தைப்பார்த்து அர்ச்சுனன் பரிகசிப்பது.

நல்வாக்கு நீகோடடி என்ற மெட்டு.

நாக்கைப் பிதுக்குவதேன் நாணியேய் குனிவதுமேன்
வாக்குக்குளறினதேன் வல்லமைபுகன்றதுமேன்

17086

காலையுதரு தேடி கண்ணால் மிறட்டாதேடி
ஜாலம் நடக்காதடி தாதி நீ யிறங்கிவாடி
நல்லூஞ்சலாடினது நாரியரே போதுமடி
அல்லியைக் கூட்டிவாடி ஆரணங்கிப்போதே ஓடி
காதிலே விழுகலையா காவலன்சொல்லேறலையா
போதுமிறங்கிவாடி பூவையை அழைத்து வாடி.

தாதிகள் செங்கமலம் மடிந்ததை அல்லிக்கறிவித்தல் தர்க்கம்.

கண்மணியே பெண்மணியே என்ற மெட்டு.

தாதிகள்.

அம்மணிகேள் செங்கமல மாருயிர் துறந்துவிட்டாள்
துன்மதியானுண்டியினால் தூக்கதனி லேறிக்கெட்டாள் (அ)

அல்லி.

சேனைக்கதிகாரியான செங்கமலந் தான்மடிய
தீயனவன் செய்ததென்ன செப்பிடுவாய் நானறிய (சே)

தாதிகள்.

தூக்குமரமேறத் தெரியாதென்று சொல்லிவிட்டான்
ஏக்கமறக் காட்டுதற்கா யேறியதில் மாட்டிக்கொண்டாள் (தூ)

அல்லி.

துட்டப்பயலாலெனது தோழியுயிர் போனதுவோ
சுந்தரி மீனும்பிகையின் சோதனையுந் தானிதுவோ (து).

அல்லி அர்ச்சுனனைப் பத்திரகாளிக்குப் பலியிடும்படி உத்திரவிடல்.

அரே ஷாதுமான் என்ற மெட்டு.

அடி சேடியே ஒருசேதி சொல்வேனுன்னை நாடியே
சீராக வேசெய்து நேராக வாவிங்கு (சேடி)

ஈனனைப்பத்திர காளிதேவிக்குப்பலி
இடுவாய் இடுவாய் இடுவாய் இடுவாய்

எழுந்து செல்லடி இரக்கமென்னடி
விழுந்து கொல்லடி விரதமுன்னடி (சேடி.)

பத்திரகாளி கோயிலண்டை அர்ச்சுனன் அல்லியை நினைத்தல்.

ஆயே சையா என்ற மெட்டு.

மானேயல்லி மகாராணியே வாராய்
மருவிச் சுகந்தாராய் (மா)

தேனே உன்னை லலைகுறேனே மன்னன்
நானே கண்ணீர் சொரியலானேன்
செய்யலாமோ வாதே
மையலும் போகாதே
தினமுமுனை நினைவுபெற மனமகிழ முனமுறுவாய் (மா)

காளிகோயிலில் நடந்த விஷயத்தைத் தோழிகள் அல்லிக் கறிவித்தல்.

பாளைவாய்க் கமுகில் என்ற மெட்டு

பத்திரகாளிக் கவனை வைத்துப் பலிதானுமிடப்
பாங்கிமாரனை வருமாய்ச் சென்றனம் கரத்
தோங்கியே வாளையெடுத்து நின்றனம்
ஆண்பலியுதவாதென அம்மையும் பிரசன்னமாய்
அங்ஙனமுரைத்து மறைந் தேகவே வந்து
தங்களை யடுத்தோமனம் நோகவே

அர்ச்சுனனை அல்லி பூதக்கிடங்கில் போட்டடைக்கும்படி உத்திரவிடல்.

என்பேரைச் சொல்லி என்ற மெட்டு.

இந்திரசால மயேந்திர சாலமெ
லாமறிந்திட்டவனே எலாமறிந்திட்டவனே அவன்
மந்திர தந்திர மாயவித்தை யட்ட
மாசித்திகற்றவனே மாசித்திகற்றவனே சற்றும்
புந்திவ ருந்தா திருந்தகு ரங்கனைப்
பூதக்கிடங்குக்குள் போடு
பூதக்கிடங்குக்குள் போடு
பூதக்கிடங்குக்குள் போடு (இந்)

மெல்லி வேடம்பூண்ட கிருஷ்ணன் அர்ச்சுனனைத் தேடல்.

இசைந்த சூலம் என்ற மெட்டு.

மணந்தநாத னெனைவிடுத் தேவெளி நடந்தாரே
மடைந்தையாளின் மனமிகவாடிட மதித்தாரே
அணைந்துகூடு மறிவுடனேமுனம் வருவாரோ
அலைந்துநோகும் படியயனூர்விதி விதித்தாரோ
தணந்துபோன விடமெவராகிலு மறிவாரோ
தகைந்ததான வளமதுராபுரி நகராரே
குணந்தகாத வெனதுமணாளனை விடுப்பீரே
குலைந்துசோரு மெனதகமாறிட உரைப்பீரே

அர்ச்சுனன் கிருஷ்ணனை வேண்டல்.

பாலும் கோநாகரா என்ற மெட்டு.

பாதம்பணிகுறேன் பாதம்பணிகுறேன்
பக்தியாய்த்தோத்திரஞ் செய்குறேன் (பா)
சீதரனேயெனக்குச் சேயிழையல்லிதனைச்
செய்துவைப்பீர்கலி யாணமே வதை
செய்யுதுமாரன்கைப் பாணமே இனிச்
சீவனும்போம்பிர மாணமே
திண்ணமா யெண்ணின வண்ணமுடித்திடச்
சித்தமிரங்குமே (பா)

அல்லி பாம்பை விலைக்குக் கேட்குதல் தர்க்கம்.

சென்னிகுளநகர் என்ற மெட்டு.

அல்லி.

பாம்புப்பிடாரனே வாடா இந்தப்
பாம்புக்கெனவிலை யோடா மனப்
பரிவாகிய விலைகூறிடத் தருவேனிது
நிசமேயறி வாயே அப்பா நீயே

பிடாரன்.

விற்கமனமிலே தாயே இதன்
மீதுனைசையொழிப் பாயே தரும்
விலைகொண்டிடி லெனதன்புள நலதங்கையி
னுளமுங்குலை வாமே உயிர் போமே.

வேறு.

வெள்ளிமலையோத்த என்ற மெட்டு.

அல்லி.

தக்கவிலை தந்திடுவே னப்பா உந்தன்
தங்கையவ ளேன்மனது மொப்பா ளினிச்
சற்றுதயை வைத்துவிலை பெற்றுமன முற்றுதவ
வேணும் நலந் தோணும்

பிடாரன்.

சந்ததமு மென்பிரிய தங்கை வைத்துத்
தன்மடியிற் கொஞ்சிடுவாள் சங்கை யேனே
தாரணியை யாளுமக ராணியுமக் கீயமன
மிலையே இது தொலையே

அல்லி.

இன்றுமொரு நாளைக்குமிப் பாம்பு மகிழ்ந்
தென்னிடமி ருக்கட்டுமிவ் வீம்பு விடு
இன்றிரவு சென்றவுட னன்றுடனீ வந்தெடுத்துப்
போவாய் இன்ப மாவாய்

பிடாரன்.

தங்கையைக்கா ணுவிடிலிப் பாம்பு மிகத்
தானிளைத்துப் போகுமுயிர் போம்பு ணருஞ்
சங்கித முணர்ந்ததிது இங்கிதம் பொருந்தினது
தானே உரைத் தேனே

சயனக்கிரகத்தில் பாம்புருப்பம் நீங்கிய அர்ச்சுனன் அல்லியைச்சேர எத்தனித்தல்.

சரணகமலாலயத்தை என்ற மெட்டு.

மதுரைநகராளுகின்ற சதுருடையமாதுஉன்றன்
வதனமலரானதென்ற னுளமேவ
மயல்னுகமாரணைந்து கணையைவிடவாவினொந்து
மருகியறிவேகுலைந்திங் கடைந்தேனே
இதுதருணமாமணைந்து மருவிநலமீயவிந்த
இரவிலணைமீதிருந்து தவியாமல்
இனிமையுறவேயெழுந்து ஒருவசனமேபுகன்று
எளியனெனையாளுவந்து இனித்தானே

கிருஷ்ணனிடம் அர்ச்சுனன் குறையிரத்தல்.

வங்காரமார்பிலணி என்ற மெட்டு.

வண்டாரு மாலையணி மாயவனு மாயைதனை
விண்டாரு மேபுகல லாவதல வேகிருபை
வையாம னீருமிருந் தாலெளிய னேதுபுரிந் திடுவேனே
பெண்டான மாவலியை மாலைபுனைந் தேதுயர
மண்டாம னமரு மாறுசெய வேணுமினி
பித்தாகி வாடியழிந் தாலிழிவு மாமுமக்கு மழகாமோ

காட்டில் பிராமணவேடம்பூண்டு தண்ணீர்ப்பந்தல் வைத்திருந்த கிருஷ்ணார்ச்சுனனை அல்லி அரண்மனைக்கழைத்தல்.

அவனியில் யாரேனும் என்ற மெட்டு.

எந்தனரண்மனைக்கு எழுந்தருளுவீர்நீவீர்
சந்தோஷமாய்ச்சிலநாள் தங்கியிருந்துபோவீர்
மெத்தவுபசரிப்பேன் வேணபொருளளிப்பேன்
சித்தமகிழ்ந்துமக்குச் சிறப்புநடத்திடுவேன்

இரவில் அர்ச்சுனன் அல்லிக்குத் தாலிகட்டுதல்.

தக்கபாராங்கல்லே என்ற மெட்டு.

தாலிகட்டுகிறே னானே இந்தத்
தையலாளல்லிக்குத் தானே சுகம்
பாலிக்கவும் பெறு வேனே நான்
பாரினிற்பாக்கிய வானே

மாயனுதவியைத் தேடி அல்லி
மாதைமணந்தனன் கூடி நல்ல
ஞாயமிதுவென்ன நாடி எந்த
நாளுமகிழுவேன் பாடி

வல்லமையெங்கடி போச்சு இந்த
மன்னவன்கையேமே லாச்சு அடி
அல்லியேயின்னமும் பேச்சு உண்டோ
ஆகாதடி இந்த ஏச்சு

அஸ்தினா புரத்தில் அல்லிக்கும் அர்ச்சுனனுக்கும் யுத்தம்.

ஓதிரு நெல்லூர் என்ற மெட்டு.

சகாதேவன்.

அண்ணியென வெண்ணுகிறே னானே உந்தன்
ஆணவமெ லாமறிகு வேனே இனி
அஞ்சவுனைக் கெஞ்சவடிப் பேனே வந்த
யானைபரி சேனைபட
மீனக்கொடி தானற்றிட

அக்கினியி னற்கணைதொட் டேனே உன
தாகமெலாம் வேகமிகத் தானே

அல்லி.

என்னமொழி சொன்னாயடா பூவி லெலனை
யாரென நினைத்தனை நீ பாவி உங்கள்
யாவரையு மாய்க்கவருந் தேவி காளி
யாரென்றறி வாயின்றுனை
யேகொன்றுட னாய்தின்றிட
எய்திடுவேன் வெய்யகணை தாவி இனி
என்சமர்த்தைப் பாரமரில் மேவி

புலிக்கூண்டி லடைப்பட்டிருக்கும் அல்லிக்கும் அர்ச்சுனனுக்கும் தர்க்கம்.

ஏனோ என்மேல் பழிசுமத்துறீர் என்ற மெட்டு.

அர்:- அல்லி உன்னை லலைகிறேனனே
அல்லி:- ஆரடா பாவி நீ
அர்:- அர்ச்சுனன் நானடி-சீ
அல்லி:- அறிந்தே னடடா திறந்தே விடடா (அல்)
அர்:- மாதே இன்னும் வர்ம மடுக்குமோ
அல்லி:- வஞ்சகக் கள்ளனே
அர்:- கெஞ்சுறேன் தஞ்சமே-போ
அல்லி:- மடையா கெடுவாய் கடையா விடுவாய் (அல்)

தோஹைரு.

அர்:- காதலி உந்தனை நீதமாய்த்தாலி
கட்டின நாதனும் நானே அட
அல்லி:- கள்ளத்தாலி கட்டி மெள்ளப் பேசவந்த
காதகனே எட்டிப் போடா
அர்:- கோபமேன் கொள்ளுறாய்
அல்லி:- பாபமேன் விள்ளுறாய்
அர்:- ஆளனை எள்ளுறாய்-சீ
அல்லி:- குலையா திருடா புலையா முரடா
அர்:- அடமே னடிநீ திடமே கொளுவாய் (அல்)

தர்க்கம்.

மன்னு தந்திவேீர் என்ற வர்ணமெட்டு.

அர்:- அல்லி வந்தனமே
அல்லி:- அடடா யேன் தந்திரமே
அர்:- தந்திர மென்ன செய்தேன்
அல்லி:- மந்திரம் போடாதே போ
அர்:- போவதினி யெங்கடி
அல்லி:- போக்கிட மில்லையோடா
அர்:- விட்டுனைப் போவேனோ தான்
அல்லி:- வெட்டுவேனுந்தனை நான்
அர்:- தாலி கட்டி வந்தவண்டி நான் (அல்)

முடிவுரை.

இவ்வாறு புலிக்கூண்டி னுள்ளிருந்து சினந் தணியாத அல்லியைத் துரோபதை, சுபத்திரை, நாககன்னி முதலியவர்களணுகிச் சமாதானஞ்செய்து அர்ச்சுனனுக்கு மணம்புரிகின்றனர்.

சுபம். சுபம். சுபம். சுபம்.

வாழி விருத்தம்.

திங்களைச்சிரத்திற்சூடுந் தேவனலுமையாள்வாழி
ஐங்கரன் வேலன்வாழி அமரர்கள் முனிவர்வாழி
மங்கையா ளல்லிவாழி மகத்துவ விஜயன் வாழி
இங்குல கத்துமாந்த ரியாவரும் வாழிவாழி.

அல்லி யரசாணி

திருப்புகழ் காவடிச்சிந்து.

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமான புத்தகவியாபாரிகளுக்கும், அச்சுக்கூடத்
தலைவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:—

செந்தமிழ்ச்சரபம்- விரகாலூர் சுப்பையப்பிள்ளையவர்க ளியா
றிய அல்லியரசாணி திருப்புகழ் காவடிச்சிந்து என்றஇப்புத்தகத்தை
இ. ராமசாமிக்கோனாராகிய என்னால் சகல பாத்தியதையுடன் பெ
று அச்சிட்டுச் காபிரைட் ரிஜிஸ்டர் செய்திருப்பதால் இப்புத்தக
தையாவது, இதிலுள்ள பாடல்களில் எதையாவது யாரேனு
எனது உத்திரவின்றி அச்சிடுவரேல் என்னால் கோரும்நஷ்டிக்கு
கவர்ன்மெண்ட் காபிரைட் சட்டத் தண்டனைகளுக்கும் உட்ப
வார்கள் என்பதை இதன் மூலமாய்த் தெரிவித்திருக்கிறேன்.

இங்ஙனம்.

இ. ராமசாமிக்கோன்

பப்ளிஷர், புக்ஸெல்லர், வடக்காவணிமூல வீதி,

மதுரை.

1-22

காமன் பண்டிகை எரிந்தகட்சி

மன்மதன் லாவணி.

துவாதசாந்த ஸ்தலவாசகர்,

ஸ்ரீமான் பழனிக்குமாரு சுவாமிகள் இயற்றியது.

இதில் காமன் பண்டிகையின் சிறப்பும், மதுரை மஹால் ...ர்ணனையும், பண்டிகை மேடையின் சிங்காரமும் லாவணி மெட்டு ...ளில் பாடியுள்ளது. படிக்கப்படிக்கத் தமாஷாய் இருக்கும்.

மன்மதன் இரதிதேவியாரிடம் விடைபெற்றுச் செல்லும் ...ால் இருவருக்கும் ஏற்படும் தர்க்கம் விசித்திரமாயிருக்கும்.

இரதி புலம்பல் ஒப்பாரிகள் மிக்க உருக்கமாயிருக்கும். ...ன்மதன் எரிந்தகட்சிக் கேள்வி லாவணிகள் பாட்டிற் சிறந்தும் ...ராண ஆராய்ச்சிகள் நிறைந்துமிருக்கும். விலை அணா 6.

மூக்கவேளாரவர்கள் நூதன வர்ணமெட்டு

டிராமாச் சரித்திரங்கள்.

...வளியாகி விட்டது! **12**-ம் ஒரே புத்தகம் வெளியாகி விட்டது!

நண்பர்கள் வெகுநாளாக எதிர்பார்த்திருந்த புத்தம்.

...ந்துங்கள்! புத்தகத்திற்கு முந்துங்கள்!!

இராமாயணம், சூர்ப்பநகைபங்கம், வாலிமோக்ஷம், இலங்காதகனம், ...லதங்கான் சரித்ரம், அல்லியரசாணி சரித்ரம், மயில்ராவணன் சரித்ரம், ...நரைவீரன் சரித்ரம், திரௌபதைவஸ்திராபஹரணம், கீசக சம்மாரம், ...திய வர்ணமெட்டு பார்வதி அரிச்சந்திரன், வள்ளியம்மை சரித்ரம், முதலிய ...அற்புத சரித்திரங்கள் 12-ம் ஒன்று சேர்ந்தது.

தற்கால நாகரிக நூதன அற்புத வர்ணமெட்டுகளால் அமைக் ...கப்பெற்றது. விலை ரூ 1-4-0

விடாநகைப்பை விளைவிக்கும்

விநோதவிகட சிந்தாமணி.

நண்பர்காள்! இதுவரை விகடப்புத்தகங்கள் அனேகம் பார்த் ...திருப்பீர்கள். ஆயினும் இதைப்போல் பூராவும் விகடமாய் இரா ...தென்பது திண்ணம். விலை அணா 4.

ஷை இரண்டாம் பாகம்.

இதில் விகடப்பிரசங்கத்திற்குரிய கதைகள் ஏராளமாய் அடங் ...கியுள்ளது. கதைகள் நினைக்குந்தோறும் சிரிப்பை உண்டாக்கும். விலை அணா 6.

கோமாளிப்பாட்டு விகடமாகவே இருக்கும் அணா 1.

வந்துவிட்டது! புத்தக[illegible] முந்துங்கள்!!

தமிழ் நாடெங்கும் புகழ்பெற்றுள்ள கன்னிச்சமீன் சரபம்

உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்களியற்றிய

இராமாயண நவீன நாடகம்.

ஏழுகாண்டங்களுஞ் சம்பூர்ணமாக அடங்கப்பெற்றுள்ளது.

இகபர சாதனங்களுக்கு இன்றியமையாததும், இஸ்டகாமியார்த்த சித்திபெறச் செய்வதும், நம்மவர்களின் ஆதி இதிகாச புராண காவியமானதும் ஆகிய இராமாயண காவியத்தை முற்காலத்துக் கவிவல்லோர்கள் பலவித காவியங்களாகச் செய்து உலகத்தை இன்புறச்செய்திருக்கிறார்கள் எனினும், அவை தற்கால நாகரிகத்திற்கு அநுகூலமானவையல்ல வென்பது நன்கறிந்ததே.

தற்காலம் நாடெங்கும் பரவி நடிக்கும் நாடகத்தார் முதலிய நண்பர் பலரும் விரும்பியவண்ணம் சிருங்காரம், வீரம், சோகம் என்ற ஒவ்வொரு பாகங்களின் சமயத்திற்கு ஏற்றவாறு இந்துஸ்தான் பார்ஸி, கெஜல், டோமரி தில்லானா, டப்பா, திருப்புகழ் வண்ணம் முதலிய பற்பல அற்புத வர்ணமெட்டுகளாலியற்றப் பெற்ற பாடல்களாலும் படிப்பவர்க்குப் பிரத்யக்ஷமாக நடைபெறுவது போலத் தோற்றும் நாவல்கள் போன்ற சிறந்த செந்தமிழ் வசனங்களாலும் மேற்கண்ட சாதுரிய மாதுரியம் சரபம் முத்துசாமிக்கவிராயவர்களா லியற்றப்பெற்று உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு ஆப்டோன் என்ற சித்திரப்படங்களால் அலங்கரித்துச் சொற்பக்காப்பிகளே தயாரித்திருக்கின்றோம்.

இதில் அமைந்துள்ள வர்ணமெட்டுகளின் இனிமையும, பாடலின் பெருமையும், வசனசாதுர்யங்களின் அருமையும் நவரச பூர்த்தியாகவேயிருக்கும். நிற்க நாடெங்கும் புகழ்பெறும் பாடல்களில் முதன்மையுற்றதும் மகிமைபெற்றதும் இதுதான்! இதுதான்! என்பது புத்தகத்தை வாங்கி வாசிக்கும் நேயர்களுக்கே நன்கு விளங்கும். முந்தினவர்களுக்கன்றிப் பிந்தினவர்களுக் ககப்படுவ தரிது. விலை ரூ 2—0—0

திரிசிரபுர வித்வரத்நாகர மதுரகவி,

அ. யோவான் அவர்கள் பாடிய,

சிவசமய தோத்திரானந்த பக்திரசக் கீர்த்தனங்கள் விலை அணா 8.

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புத்தகவியாபாரம், புதுமண்டபம், மதுரை.